18.11.2025

O.S.No. 415/2021

DW1– பார்வதி – க/பெ. பிச்சையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.11.2025

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி எனது மகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் சண்முகையாதேவர் மகன் சுப்பையா தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுப்பையாதேவருக்கு 1,2 பிரதிவாதிகள் மகன்கள் என்றாலும், 3ம் பிரதிவாதி மகள் என்றாலும் சரிதான். வாதிகள் சுப்பையாத்தேவரின் இறந்துபோன மகளான செல்லத்தாயின் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. நாங்கள் 1ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் மூலமாக தபசில் சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல. நாங்கள் 2ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர்மூலமாக கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். சண்முகையா தேவருக்கு நாங்கள் கிரையம் பெற்ற தபசில் சொத்து முழுமையாக பாத்தியப்பட்டது என்பதற்கு காட்டக்கூடிய ஆவணம் கிடையாது. மேற்படி சங்கதிகள் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்களுக்கு கிரையம் கொடுத்தஅதிகாரம்பெற்ற முகவரின் பெயர் முத்துக்குமார். மேற்படி சண்முகையாத்தேவருக்கு வாய்மொழி பாகம் பற்றி நாங்கள் கிரையம் பெற்ற அதிகார முகவரிடம் விசாரித்தோமா என்றால் ஊரிலும் விசாரித்தோம் அவரிடமும் விசாரித்தோம். 2ம் பிரதிவாதியிடம் நேரடியாகசென்று தபசில் சொத்து பற்றிகேட்டோமா என்றால் கேட்டோம்.

3. எனது கிரைய ஆவணத்திலும், கிரையம் கொடுத்த அதிகாரம் பெற்ற முகவரின் அதிகார ஆவணத்திலும் சண்முகையாத்தேவருக்கு எந்த தேதியில் ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் ஆவணத்தில் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது, 2ம் பிரதிவாதிக்கு 1976ம் ஆண்டு பாகபிரிவினையில் கிடைத்தது.

4. பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலும் 2ம் பிரதிவாதிக்கு தபசில்சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 2ம் பிரதிவாதி எங்களிடம் வாய்மொழி மூலம் கிடைத்தது என கூறினார். 2ம் பிரதிவாதியுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனைபேர் என்று கிரையம் வாங்கும்போது விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மேலும் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்களிடம் தபசில்சொத்தை வாங்குவதற்கு எந்த ஆட்சேபனையும் கேட்கவில்லை என்றால் அவர் வெளியூரில் இருந்ததால் ஊர் மக்களிடம் கேட்டோம். அவரிடம் நேரடியாக கேட்டிருந்தால் பாகம் பிரிக்கப்பட்டதா என தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

5. 2ம் தபசில் சொத்து வாதிகளுக்கு தீர்ப்புப்படி பரிகாரம் கிடைப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு மட்டுமே உரிமை உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்தபின்பு 2ம் பிரதிவாதியை சந்தித்தேனா என்றால் இல்லை, நான் தபசில்சொத்தை வாங்கி 30 ஆண்டுகள் ஆகிவிட்டது.

6. பி.வா.சா.ஆ.5 ஆவண தீர்ப்பாணையில் எதிர்வழக்கருக்கும், எங்களுக்கும் உரிமையியல் பிரச்சனை ஏற்பட்டதாக 14.02.2006 ம் ஆண்டு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான், ஆனால் அந்த வழக்கு 24.02.2006 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்த 1 மாத காலத்திற்குள் நடத்தவேண்டாம் என்று கூறுவதற்கு காரணம் என்னவென்றால் எங்களுக்கு உறுத்துக்கட்டளை கிடைத்தது. மேலும் அந்த வழக்கு பிரதிவாதிகள் தபசில்சொத்தில் காற்றாடி நிறுவமாட்டார்கள் என்று கூறியதால் திரும்ப பெற்றேன். மேற்படி வழக்குதாக்கல்செய்த சமயத்தில் எனதுபெயரில் பட்டா இருநத்தா என்றால் பட்டா இல்லை, பிப்ரவரி 2006 ம் ஆண்டு தான் கிரையம் வாங்கினோம், கிரையம் வாங்கியபோது பிரச்சனை இருந்ததால் வழக்கு தாக்கல் செய்தோம்.

7. 6,7 பிரதிவாதிகள் பார்வதி என்ற நபரிடமிருந்து கிரையம் வாங்கியதாக கட்சி செய்கிறார்கள் என்றாலும், அந்த பார்வதி நான் தான் என்றாலும் சரியல்ல. மேற்படி விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் பி.வா.சா.ஆ.5 வழக்கு தாக்கல் செய்த சமயத்திலே தெரியும். நான் பி.வா.சா.ஆ.5 வழக்கில் பார்வதி என்ற நபர்மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இல்லை. முன்வழக்கில் மேற்படி பார்வதியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, அதற்குபதிலாக தான் காற்றாடி நிறுவனமான சுஸ்லாங் நிறுவனத்தை கட்சி சேர்த்துள்ளேன். மேற்படி காற்றாடி நிறுவனம் கிரையம் வாங்கிய பார்வதியின் கணவர் பெயர் புலியுடையான் என்று தெரியும், அவர்கள் எந்த ஊரில் வசித்துவந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

8. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி பார்வதியின் முழுவிவரத்தையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பார்வதியையும், இந்த வழக்கு வாதியையும் பி.வா.சா.ஆ.5 ல் சேர்க்கவில்லை என்பதால் வாதிக்கு முன்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் எந்த பாகம் உள்ளதோ அதுமட்டும் தான் எனக்கு கிடைக்கும் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

9. எங்களது கிரைய ஆவணம் தான் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 வழக்கில் வாதிகளோ, மற்ற பிரதிவாதிகளோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். வழக்குசொத்து சுப்பையா தேவரின் பூர்வீக சொத்து என்றும், அதில் வாதிகளின் தாயார் செல்லத்தாய்க்கும் 4 ல் 1 பங்கு உண்டு என்றாலும், அதனால் வாதிகளுக்கு பங்கு உண்டு என்றாலும், வாதிகளின் தாயார் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை, யாருக்கும் விட்டுக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.